இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## ஆரம்பப் பரீட்சை - 2014 சனவரி

## (53) வணிகக் கல்வி
(Business Studies)

---

இவ்வினாத்தாளானது பாடத்திட்டத்தின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கின் பரீட்சார்த்திகளின் ஆற்றுகை திருப்தியாக உள்ளது. எனினும் சில பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளிக்கத் தவறியுள்ளார்கள். இந்தப் பரீட்சகர் அறிக்கையின் பிரதான நோக்கம் வெற்றிகரமாக புள்ளிகளைப் பெறாத பரீட்சார்த்திகளின் கவனத்தை ஈர்ப்பதாகும். ஒவ்வொரு வினாவுக்குமான விடையைப் புள்ளியிடும்போது பரீட்சகர்கள் கண்டறிந்த முக்கியமான குறிப்புகள் தனித்தனியாகக் கீழே தரப்பட்டுள்ளன.

## <u>பகுதி - A</u>

**வினா இல. 01** - 40 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

இப்பகுதி 20 பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும். மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

இவ்வினாவானது பாடத்திட்டத்தின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கி, பரீட்சார்த்திகளின் பிரயோக அறிவைச் சோதிக்கின்றது. கிட்டத்தட்ட பரீட்சார்த்திகள் எல்லோரும் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளார்கள். ஆனால் பெரும்பாலானவர்களால் அதிக புள்ளிகளைப் பெற முடியவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகள் உபபிரிவுகள் (N), (P), (R), (T) ஆகியவற்றுக்கு சரியாக விடையளித்திருக்கவில்லை. இது பற்றி புள்ளியிட்ட பரீட்சகர்களின் அவதானிப்புகள் பின்வருமாறு:

(N) ஒப்பீட்டு அனுகூலம், முற்றுமுழுதான அனுகூலம் ஆகியவை தொடர்பான பாட அறிவு இல்லாததனால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருக்கவில்லை.

(P) சுங்க சங்கங்கள் பற்றிய துல்லியமான விளக்கம் பரீட்சார்த்திகளிடம் இல்லை.

(R) சென்மதிகள் நிலுவைக் கணக்கின் "நடைமுறைக் கணக்கில்" சேர்த்துக்கொள்ளப் படுகின்ற, சேர்த்துக்கொள்ளப்படாத உருப்படிகள் தொடர்பான அறிவு இல்லாததைக் காண முடிந்தது.

(T) இலங்கையின் பொதுநலவாய அரசுகளின் தலைவர்களின் கூட்டம் பற்றிய பிரயோக அறிவு இல்லாததன் காரணமாக பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியுள்ளனர்.

## பகுதி - B

**வினா இல. 02** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** (i) ‘‘தொழிற்பிரிப்பு’’ எண்ணக்கருவைச் சிறப்பாக விபரித்து எழுதி பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

(ii) பெரும்பாலான மாணவர்கள் ‘‘சிறப்புத் தேர்ச்சி’’ பற்றி சரியாக விளக்கி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**(b)** பங்குடைமை வியாபாரத்தைப் பாதிக்கின்ற சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்கள் பற்றி சில பரீட்சார்த்திகளுக்குத் தெரியவில்லை. எனவே முழுப் புள்ளிகளைப் பெறுவதில் அவர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

**(c)** 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைச் சரியாகக் குறிப்பிடுவதில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிபெற்றுள்ளனர்.

**வினா இல. 03** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** வினாவை முறையாக விளங்கிக்கொள்ளாதபடியால் சில பரீட்சார்த்திகள் இலங்கையின் நிதிசார் முறைமையில் நிதிசார் நிறுவனங்களின் பிரதான வகைகளைக் குறிப்பிடத் தவறியுள்ளனர். எனினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

**(b)** அனுமதி பெற்ற வணிக வங்கிகளின் பெயர்களைக் குறிப்பிடவும் அனுமதி பெற்ற வணிக வங்கிகளின் பணிகளைப் பட்டியலிடவும் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இயலுமாக இருந்துள்ளது.

**(c)** ஆனால் சில பரீட்சார்த்திகள் அனுமதி பெற்ற வணிக வங்கிகளின் பெயர்களுக்கு ஒரு உதாரணமாக இலங்கை மத்திய வங்கியையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**வினா இல. 04** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** இலங்கையில் உல்லாசப் பயணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக முதலீட்டு சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்குத் தெரியவில்லை. சில பரீட்சார்த்திகள் ‘‘முதலீட்டுச் சபை’’ என்ற பதத்தையே அலட்சியப் படுத்திவிட்டு, உல்லாசப் பயணக் கைத்தொழில் அபிவிருத்திக்கான பொதுக்காரணிகளை மட்டும் விளக்கியுள்ளார்கள். இதனால் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளார்கள்.

**(b)** முயற்சியாண்மையின் அபிவிருத்திக்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பங்களிப்பை பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விளக்கி முழுப் புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

**(c)** ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வழங்கப்படும் பிரதான சேவைகளைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## வினா இல. 05 – 15 புள்ளிகள்

**(தெரிவு வினா)**

**(a)** ‘‘காப்புறுதி செய்தலினால் இலாபங்களைச் சம்பாதிக்க முடியாது’’ எனும் கூற்றினைப் பொருத்தமான காப்புறுதிக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி விளக்குமாறு கேட்ட வினாவுக்கு சில பரீட்சார்த்திகள் மட்டுமே சரியாக விடையளித்துள்ளார்கள்.

**(b)** இலங்கையின் காப்புறுதிக் கம்பனிகளால் பயன்படுத்தப்படுகின்ற நட்ட உத்தரவாத முறைகளைப் பற்றி பரீட்சார்த்திகள் தெரிந்திருக்கவில்லை என்பதை அவர்களது விடைகளிலிருந்து அறிய முடிகின்றது.

**(c)** ‘‘கடல் அபாயக் காப்புறுதியில்’’பயன்படுத்தப்படும் காப்புறுதி ஆவண வகைகளைப் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விளக்கி நியாயமாக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## வினா இல. 06 – 15 புள்ளிகள்

**(தெரிவு வினா)**

**(a)** முற்றுமுழுதான நன்மைக் கோட்பாட்டின் வரையறைகளை எண்சார் உதாரணம் கொண்டு விளக்குமாறு வினாவில் கேட்கப்பட்டிருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்கு விடைளிக்க எத்தனித்துள்ளார்கள். முற்றுமுழுதான நன்மைக் கோட்பாடு தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் குறைவாக இருந்தமை தெரிகின்றது.

**(b)** சென்மதி நிலுவையினைத் தொடர்புபடுத்திப் பின்வருவனவற்றை விளக்குமாறு வினாவில் கேட்கப்பட்டிருந்தது:

**(i)** நடைமுறைக் கணக்கு மீதி: பெரும்பாலான பரீட்சார்த்திகள் பாதீட்டில் நடைமுறைக் கணக்கு மீதியைப் பற்றி விளக்கியுள்ளனர். ஆனால் சென்மதி நிலுவைக் கணக்கின் நடைமுறைக் கணக்கு மீதியை விளக்கவில்லை.

**(ii)** ஒட்டுமொத்த மீதி: பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒட்டுமொத்த மீதியைச் சரியாக விளக்கத் தவறியபடியால் இவ்வினாவுக்குப் புள்ளிகளை பெற அவர்களால் இயலாமல் போயுள்ளது.

**(c)** அந்நியச் செலாவணி வீதத்தில் மிகை மதிப்பீட்டின் பொருளாதாரத் தொடர்புகளை மிகச் சிலரே விளக்கியுள்ளனர். சில பரீட்சார்த்திகள் அந்நியச் செலாவணி வீதத்தின் தேய்மானம் பற்றிய பொருளாதாரத் தொடர்புகளை விளக்கியுள்ளார்கள்.

## வினா இல. 07 – 15 புள்ளிகள்

**(தெரிவு வினா)**

சிறு குறிப்புகள் எழுதும்படி கேட்கப்பட்ட இவ்வினாவுக்குச் சில பரீட்சார்த்திகளே விடை எழுதியுள்ளனர். (a), (d), (e) வினாப் பகுதிகளுக்கு எழுதப்பட்டுள்ள விடைகள் திருப்தியாக இல்லை. (b), (c) ஆகியவற்றுக்கான விடைகள் ஓரளவு திருப்திகரமானவை.

**(a)** <u>**வர்த்தகத் தாள்கள்**</u>

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடையை எழுதி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**(b) <u>வர்த்தக மாற்று வீதம்</u>**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியான விடையை எழுதி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**(c) <u>ஆவணமுறையான நாணயக் கடிதம்</u>**

இவ்வினாவுக்கு விடை எழுதிய பரீட்சார்த்திகளும் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**(d) <u>முன்னோக்கிய நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்கள்</u>**

பரீட்சார்த்திகள் முன்னோக்கிய நாணயமாற்று கொடுக்கல் வாங்கல் பற்றி சரியாக புரிந்துகொள்ளவில்லை.

**(e) <u>அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்</u>**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பகுதியைப் புறக்கணித்துள்ளதோடு எழுதியவர்களும் பிழையான விடைகளையே தந்துள்ளனர்.

- - -

## <u>பரீட்சார்த்திகளின் விளக்க அறிவு மட்டத்தை மேலும் விருத்திசெய்திட கவனத்தில் கொள்ளவேண்டிய பொதுவான குறிப்புகள்</u>

1. வினாத்தாளை கையில் எடுத்தவுடன் பரீட்சார்த்திகளுக்காகத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசியுங்கள். கட்டாய வினாக்கள், தெரிவு வினாக்களைச் சரியாக இனங்காணுங்கள். வினாத்தாளிலேயே விடைகளை எழுத வேண்டாம்.

2. வினாவை பலமுறை வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மட்டும் விடை அளியுங்கள். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

3. விடை எழுதும்போது நேர முகாமைத்துவத்தின் முக்கியத்தைப் பேணுங்கள்.

4. விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன் வினா இலக்கங்கள் உங்களது சுட்டெண் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

5. பரீட்சைக்கு முன்னாயத்தம் செய்யும்போது கடந்தகால வினாத்தாள்களுக்கு விடை எழுதிப் பயிலுவதன் மூலமாக உங்களது பாட அறிவையும் விடைகளைச் செவ்வனே எழுதும் ஆற்றலையும் நீங்கள் வளர்த்துக்கொள்ளுங்கள்.

6. உங்களது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள அண்மையில் பிரசுரமான சஞ்சிகைகள், கைநூல்கள், செய்திப் பத்திரிகைகள், பாடநூல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.

7. சித்தியடைய வேண்டும் என்ற பிரதான குறிக்கோளுடன் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * -